1982 பிப்ரவரி 17]

இணைப்பு

(..3ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 221—க்கு கான விடையைக் சுாண்க)

விவர அறிக்கை

(அ) ஆம்.

(ஆ) 1978 ஏப்ரல் 1 முதல் 31—3—1981 வரை தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் நிகழ்ந்துள்ள ஒழுங்கீனங்கள் பற்றி அரசினுடைய கவனததிற்கு வந்துள்ளது. அவற்றின் முழு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

கரூர் சேமிப்பு கிடங்கு

1 கரூர் சேமிப்பு கிடங்கின் முன்னாள் சேமிப்புக் கிடங்கு கண் காணிப்பாளர் திரு. வி. சிவசுப்பிரமணியம் மீது ஒரு புகார் மனு வந்தது. அம்மனுவில் உள்ள குற்றச்சாட்டுகளை சென்னை லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநருக்கு அனுப்பி தீர விசாரிக்குமாறு தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டார். மேலும் திரு. வி. சிவசுப்பிரமணியத்தினை சங்கரன்கோயில் சேமிப்புக் கிடங்கிற்கு மாற்றப் பட்டுள்ளதாகவும் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். அரசு இந்த செயற்குறிப்பை பரிசிலனை செய்தது. பின்னர் ஜூலை 1979—ல் அக் குற்றச்சாட்டு மனுவினை விசாரித்து ஓர் அறிக்கை அனுப்பிவைக்குமாறு சென்னை லஞ்ச ஒழிப்பு மற்றும் கண் காணிப்பு இயக்குநர் கேட்டுக் கொள்ளப் பட்டார். விசாரணை அறிக்கையில் முன்னாள் கரூர் சேமிப்புக் கிடங்கு கண் காணிப் பாளர் திரு. வி. சுப்பிரமணியம், அதிகாரத்தைத் தவறாக பயன் படுத்தி 18—2—1978 ஆம் நாளன்று ரூபாய் 14,450 (ரூபாய் பதினான்காயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்) மதிப்புள்ள 10 டன் எடையுள்ள யூரியா மூட்டைகளை தன்னுடைய சொந்த நன்மைக்காக திருவாளர்கள் டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனியின் பிரதிநிதி திரு. கே. ராஜகோபால் மற்றும் சேமிப்புக் கிடங்கின் சில அலுவலர்களின் உதவியுடன் திண்ணப்ப கிடங்கிலிருந்து எடுத்துச் சென்று விட்டதாக தெரிய வந்தது. மேற்கூறிய செயலை மறைப்பதற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை (records) அதிகார பூர்வமற்ற முறையில் மாற்றி திருத்தி கணக்குகளை சரி செய்துள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது. மேற்படி விசாரணை அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட நபர்கள் மீது, தமிழ்நாடு சிவில் சர்வீஸ் விதி களின் கீழ் தக்க நடவடிக்கை எடுக்க அவர்கள் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு துறை நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக சேமிப்பு கிடங்கு நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். கரூர் சேமிப்புக் கிடங்கில் பல்வேறு எடை யில் உள்ள பல்லாயிரக் கணக்கான உர மூட்டைகளை ஒரே சீரான எடையாக மாற்றும்போது எடையில் புரியும் துஷ்பிர யோகத்தினால் கிடைக்கின்ற உரங்களையும் மேற்படி பல்லாயிரக் கணக்கான உர மூட்டைகள் கிடங்கிற்கு உள்ளே வரும்போது வெளியே செல்லும்போதும் சிந்துகின்ற உரங்களையும் இவ்வாறு

1982 பிப்ரவரி 17]

ஏற்படுகின்ற உபரி உரங்கள் அவ்வப்போது கணக்கில் கொண்டு வரப்படாமல் அவையவும் ஸ்டேன்ஸ் நிறுவனம் என்ற பெயரில் கிடங்கு கண்காணிப்பாளரால் வைக்கப்பட்டதாகவும் எடுத்த தாகவும் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். இந்த பத்தியில் கூறப்பட்ட ஒழுங்கீனச் செயல் பற்றி விசாரணை நடந்து வருகிறது. இதனால் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் திற்கு எவ்வித பண இழப்பும் ஏற்படவில்லை என்று நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மதுராந்தகம் சேமிப்பு கிடங்கு—முன்னாள்செங்கல்பட்டு சேமிப்புக் கிடங்கு உதவியாளர் திரு. எம். பாலகிருஷ்ணன், மதுராந்தகம் சேமிப்புக் கிடங்கின் கண்காணிப்பாளராக கூடுதல் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருந்தகாலத்தில் திரு. பலராமன், இளநிலை உதவியாளர், திரு. என். கோவிந்தராஜன், அடிப்படை ஊழியர் ஆகியோர் உதவியுடன் தட்டாரத் தெருவில் உள்ள சேமிப்புக் கிடங்கிலிருந்து 10 நெல் மூட்டைகளை அப்புறப் படுத்தி விற்பனை செய்துவிட்டார். 23—6—1979 ஆம் நாளி லிருந்து திருவாளர்கள் எம். பாலகிருஷ்ணன், சேமிப்புக் கிடங்கு உதவியாளர் என். கோவிந்தராஜன், அடிப்படை ஊழியர், பீ. பலராமன், இளநிலை உதவியாளர் ஆகிய மூவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். பின்னர் மேல் முறையீடு Appeal செய்து கொண்ட திரு. எம். பாலகிருஷ்ணன், இளநிலை உதவி யாளர் என்ற அந்தஸ்துக்கு குறைக்கப்பட்டு, மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டார். மேற்கூறிய மூவரிடமிருந்தும் ரூபாய் 5,000 (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வசூல் செய்யப்பட்டது. இது விஷயத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு எந்த வித பண இழப்பும் இல்லை என்று நிர்வாக இயக்குநர் தெரிவித் துள்ளார்.

3. விழுப்புரம் சேமிப்பு கிடங்கு—தமிழ்நாடு சேமிப்புக் கிடங் கினுடைய விழுப்புரம் சேமிப்புக் கிடங்கிற்கு 10—2—1980 ஆம் நாளன்று ஸ்பிக் நிர்வாகத்தினர் மீளவிட்டான் என்னும் ஊரிலிருந்து 11,900 மூட்டைகள் யூரியாவை அனுப்பினார்கள். மேற்கூறிய மூட்டைகள் உள்ளடக்கிய 26 இரயில்வே ரசீதுகள் 13—2—1980 விழுப்புரம் சேமிப்புக் கிடங்கில் பெறப்பட்டு அந்த ரசீதுகள் ஏற்றி இறக்குதல் மற்றும் போக்குவரவு செய்யும் ஒப்பந்தக்காரர் திரு. ஆர். ஜோதிபிரகாசத்திடம் ஒப்படைக்கப் பட்டன. அவற்றில் 34 மெட்ரிக் டன் எடையுள்ள 680 மூட்டை யூரியாவை இரயில்வேயில் டெலிவரி எடுத்த பின் ஒப்பந்தக்காரர்

ரூர் சேமிப் கிடங்கு

அவற்றை சேமிப்புக் கிடங்கிற்கு ொண்டு வந்து சேர்க்கவில்லை. அந்த யூரியா மூட் டைகளின் மதிப்பு ரூபாய் 68,000 (ரூபாய் அறுபத்தெட்டாயிரம்) ஆகும். 30—11—1980 ஆம் நாளன்று இது பற்றி காவல் துறையில் புகார் செய்யப்பட்டது. காவல் துறையினர் மேற்கூறிய ஒப்பந் க்கார ர 15—12—1980 ஆம் நாளன்று கைது செய்தனர். ந்த யூரியா மூட்டைகளின் மதிப் பான ரூபாய் 68,000-ஐ வசூல் செய்து நீதிமன்றத்தில் வைப்பு தொகையாக செலுத்தியுள்ளனர். காவல்துறையினர் தாக்கல் செய்த வழக்கு நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது சம்பந்தப்பட்ட நபர்கள் மீது தமிழ்நாடு சிவில் சர்வீஸ் (Civi Service) விதிகளின் பிரகாரம் துறை நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் தெரிவித் துள்ளார். விழுப்புரம் முன்னாள் கிடங்கு கண்காணிப்பாளர் திரு. பி. நாகராஜன், முன்னாள் இளநிலை உதவியாளர் திரு. பி. தேவன் ஆகிய இருவரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS